**09.12.2024**

**A1- A5 present**

**CC-331/2022**

அரசுதரப்பு சாட்சி - **8**-சித்ரா

**5** ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

5 வது எதிரி எங்கு இருக்கிறார் என்ற விபரம் என்றைக்கு, எப்போது, எப்படி எனக்கு தெரியும் என்றால் 5 ம் எதிரியின் தொலைபேசி எண்ணின் பதிவுகளை கால்டீடெய்ல் மூலமாக அவர் இருக்கும் இடம் மற்றும் அவர்யாருடன் தொர்புகொண்டுள்ளார் போன்ற விபரங்களை தெரிந்து கொண்டேன். மேற்சொன்ன விபரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில் 5 ம் எதிரி எங்கிருக்கிறார் என்ற விபரம் ரகசிய தகவல்மூலமாக பெறப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பெற்ற ரகசியதகவலை தனி ஆவணமாக பதிவு செய்து என்னுடைய நேரடி உதவி அதிகாரிக்கு பிரிவு 42 ன் படி அனுப்பவில்லை என்றால் சரிதான். 5 ம் எதிரியை சோதனை செய்தது யார் என்றால் அன்றைய நிலைய பொறுப்பில் இருந்த காவலர் அவரை சோதனை செய்தார். எதிரியை சோதனை செய்வதற்கு முன்னர் பிரிவு 50 ன் படியான எதிரிக்கான உரிமை எடுத்து கூறப்பட்டு அவரிடம் சம்மதம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. 5 ம் எதிரியிடமிருந்து எந்த போதைப்பொருளும் கைப்பற்றப்படவில்லை

என்றால் சரிதான். இந்த வழக்கில் 5ம் எதிரி பயன்படுத்தியதாக கூறும் பைபர்போட்டை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அவர் பயன்படுத்தியதாக கூறும் பைபர்போட் குறித்து மீன்வள அதிகாரியிடம் விசாரணை செய்து விபரத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் மற்றும் சிம்கார்டின் உரிமையாளர் யார் என்பது பற்றிய விபரங்களை நோடல் அதிகாரியை விசாரணை செய்து விபரங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 08.10.2021ம் தேதி தயார் செய்யப்பட்டதாக கூறப்படும் அ.சா.ஆ.3ல் இந்த எதிரியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 08.10.2021ம் தேதி 1ம் எதிரியிடமிருந்து பெறப்பட்டதாக கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் 5ம் எதிரியிடமிருந்து எந்த ஒரு போதைப்பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். கீழவைப்பார் பகுதியில் உள்ளவர்களை விசாரணை செய்து 5ம் எதிரி பைபர்போட் பயன்படுத்தி வந்தாரா என்ற விபரத்தை விசாரணை அறிக்கையாக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.22 நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 12.01.2022ம் தேதி ஒப்படைக்கப்பட்டு உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி திருப்பப்பட்டு பின்னர் 09.02.2022-ம் தேதி விசாரணை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டடுள்ளது

என்றால் சரிதான். மேற்படி 19 நாட்களுக்கான காலதாமதத்திற்கான காரணம் எதுவும் ஆவணமாக பதிவு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனக்கு எந்த ரகசியதகவலும் வரவில்லை என்றாலும், நான் சொன்ன நேரம், நாள் இடத்தில் 5 ம் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் 5 ம் எதிரியிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கைபேசிக்கும் , சிம்கார்டுக்கும் எந்தஒரு சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு எதிரியிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5 ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 5 ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஒரு தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.